# மிஸிஸ் & பேத்டே

# MRS. & BIRTHDAY

يَاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوا اتَّقُوا اللّٰهَ حَقَّ تُقٰتِهٖ

وَلَا تَمُوْتُنَّ اِلَّا وَاَنْتُمْ مُّسْلِمُوْنَ

**"விசுவாசிகளே! நீங்கள் அல்லாஹ்வுக்குப் பயப்பட வேண்டியவாறு மெய்யாகவே பயப்படுங்கள். (முற்றிலும் அவனுக்கு வழிபட்ட) முஸ்லிம்களாக அன்றி, நீங்கள் இறந்துவிடவேண்டாம்" (3;102).**

\- அன்பர்நூன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளடக்கம்


- ★ மிஸிஸ்
- ★ ஆண், பெண் சமத்துவம்
- ★ ஆங்கில அமெரிக்க கலாசாரம் அருகும் காலம் அண்மித்து விட்டது.
- ★ இராவணன்
- ★ கௌதம புத்தர்
- ★ விபச்சாரம்
- ★ பேத்டே
- ★ அப்பாவிகளா? பாவிகளா?
- ★ பெருமை


## தகமைகாண் உரை

பெருமைக்கோ கட்சி வளர்ப்பதற்காகவோ அல்லது, அரசியலில் ஒரு புள்ளியாகத் திகழ்வதற்காகவோ அல்லாது தனித்துவமாக அல்லாஹ்வின், பாதையில் பலநூறு ஆக்கங்களைப் படைத்து சமுதாயத்திற்களித்துள்ளார், எங்கள் ஆசிரியர்க்கோன் "அன்பர்நூன்" அவர்கள். இது போன்று பல்வேறு புனைப்பெயர்களில் அவருடைய சிறிய ஆக்கங்களும், சொந்தப் பெயரில் பெருநூல்களும் வெளிவந்துள்ளன என்பது வாசகர்கள் அறிந்ததே.

வழமைபோல் அவருடைய Mrs & Birhday என்னும் இவ்வாக்கத்தையும் வெளிக்கொணர்வதில் எமது ஜமாஅத் பெருமைப்படுகிறது.

இதுவரை எந்த எழுத்தாளனும், பேச்சாளனும் அணுகாத ஒரு துறையைக் குறித்து அரிய விளக்கம் தரும் இச்சிறிய ஏட்டினை உங்கள் கரங்களில் தவழவிடுவதிலே நான் பெருமகிழ்வடைகின்றேன்.

இஸ்லாமிய ஊழியன்
- முஹம்மது ந.ஃப்ரீஸ்

இபாதத்துல் இஸ்லாம்
கல்முனை
ஹிஜ்ரி 1426 ரமழான் 10
(14-10-2005)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

بسم الله الرحمن الرحيم

# மிஸிஸ் & பேத்டே
# Mrs. & Birthday

மேற்கண்ட தலைப்பைப் பார்க்கிற பொழுது "இது என்ன ஆங்கிலச் சொற்களாக இருக்கின்றனவே" என நீங்கள் அங்கலாய்க்கலாம். ஆம்! அச்சொற்களுக்குரிய செயல்கள் தாம், இன்று நம் தனித்துவத்தைக் கலப்படம் செய்து வருகின்றன. இவ்விடயத்தைத் தெரிந்து கொள்ள தொடர்ந்து படியுங்கள்.

"தனித்துவம்" என்பது பல அம்சங்களை உள்ளடக்கியதாகும். கடந்த காலங்களில் தனித்துவம் பேசிய அனேகர் தங்கள் வாழ்வில் அதனைச் சரிவர நடைமுறைப்படுத்தியதாகத் தெரியவில்லை! மாறாக அவர்கள் தங்கள் பாதத்தடியில் சமுதாயத்தினர் வீழ்ந்து தவமிருக்க வேண்டும் என்பதற்காகவே அதனைக்கூறி - கோஷமெழுப்பி - மக்களின் உணர்வுகளைத் தூண்டி வந்துள்ளனர் என்பது புலனாகிறது. இறுதியில் நிலமை என்னவென்றால், சொன்னவர்களிடமும் - அதாவது: போதனை புரிந்தவர்களிடமும் அது இல்லை. அவர்கள் சொற்கேட்டு, "சுபுஹானல்லாஹ்" போட்டவர்களிடமும் அது இல்லை!

எப்படிவரும் அது? "கோன் எவ்வழியோ, குடிமக்களும் அவ்வழி!" என்று ஆன்றோர்கள் அழகாகக் கூறி வைத்தார்கள். அதாவது: அதிகார பீடத்திலுள்ளவர்கள் எவ்வழியோ, அவ்வழியே மக்களும் என்பதாகும். இந்தப் பழமொழி எவ்வளவு உண்மையானது என்பதை, இன்று நாம் கண்கூடாகக் கண்டு, அதன் கேடுகெட்ட தன்மைகளை அனுபவித்து வருகின்றோம். ஆனால், அவற்றினை உணர்ந்து, ஆவனசெய்ய முற்படுவது கிடையாது!

இதில் சில அம்சங்கள் என்றில்லை, பல பிரிவுகள் பொதிந்துள்ளன. அரசியல், பொருளியல், கலை, கல்வி, கலாசாரம் என்று பற்பல அம்சங்கள் உள. அவற்றில் சிலவற்றை மட்டும் இங்கு விளக்க விளைகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மிஸிஸ்

அல்குர்ஆன், அல்ஹதீஸ் விரிவுரையாளரும், பேராசிரியரும் பேரறிஞருமாகிய அல்ஹாஜ் பா. தாவூத் ஷா அவர்கள் 1955 ந்திலேயே இந்த நா(ய்)கரிக உலகிற்கு ஒரு சவால் விடுத்தார்கள். அதாவது "மேரி ரோபட்டை மணந்தால் அவள் மிஸிஸ் ரோபட் ஆகிவிடுகிறாள். ஆனால் ஆயிஷா அப்துல்லாஹ்வை மணந்தால், இவள் மிஸிஸ் அப்துல்லாஹ்வாக மாறமாட்டாள்" என்று.

ஆம்! அந்த அளவுக்குப் பெண்களின் தனித்துவம், இஸ்லாத்தில் பேணப்படுகின்றது. 'சுலைஹா', 'சுலைமானை' மணந்தால் அவள் ஜனாபா சுலைமானாகவோ அல்லது, மிஸிஸ் சுலைஹா சுலைமானாகவோ மாறிவிடுவது - அப்படி அழைப்பது அவளது தனித்துவதத்திற்கு விளைவிக்கப்படும் பங்கமாகும்! பெண்களை அடிமைப்படுத்தி ஆண்களின் கண்குளிர்ச்சிக்காக அவர்களை அரை நிர்வாணமாக முக்கால் நிர்வாணமாக ஆடைகளில் அலங்கரித்து பொதுச்சபைகளில் அமரச்செய்து களிகூறும், ஆங்கிலேயனின் கலாச்சாரம் அது! ஒழுக்கமும், உயர் பண்பாடும், மேன்மையான நாகரிகமும் கொண்ட இஸ்லாத்தினுடைய கலாசாரமல்ல அது!! எமது தனித்துவத்திற்கு மாறுபட்டது அது!!!

அத்துடன் அது, எமது சகோதர இனமாகிய ஹிந்துக்களின் கலாசாரமுமல்ல. ஸ்ரீராமரின் மனைவி சீதை. அவர் சீதை என்றே அழைக்கப்படுகிறாரே தவிர, திருமதி ராமன் என்றோ, மிஸிஸ் ராமன் என்றோ அழைக்கப்படுவதில்லை! முதன் மனிதர்களாகிய -

ஆதம் (பரமசிவன்)
ஹவ்வா (பார்வதி)

இவர்களை திருமதி. பரமசிவன் என்றோ, அல்லது மிஸிஸ் பர.. சிவன் என்றோ அழைப்பதில்லை. அதுபோல கண்ணகியை மிஸிஸ் கோவலன் என்றும் கூறுவதில்லை.

மேல்நாட்டுக் கலாசாரத்தில் மூழ்கியுள்ள சில முஸ்லிம்கள் உளர். இவர்கள் தங்களை முஸ்லிம்கள் என்று சொல்லிக் கொள்வதில் என்ன அர்த்தமுண்டு? ஆங்கிலேயனின் அறிவுகெட்ட நா(ய்)கரிகத்தைப் பின்பற்றிக் கொண்டு அதன் பின்னரும் தங்களை முஸ்லிம்கள் என்று பறைசாற்றிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளவதில் வெட்கம் - ரோஷம் ஏற்படவில்லையா? உங்களுடைய அமரிக்க - ஐரோப்பிய - "நஸாராமோகம்" சில நாட்கள் உங்களுக்குச் சோறு போடலாமே தவிர 50, 60 அல்லது 100 வருடங்களில் நீங்கள் இவ்வுலக வாழ்வை முடித்துக்கொண்டு இடம்பெயரும் பொழுது, அம்மோகம் சுகத்தைத்தராது! சகிக்கமுடியாத துன்பத்தைத்தான் தரும்! பயங்கரவாதத் தாலும், சுனாமியினாலும் இடம்பெயர்ந்து - புலம்பெயர்ந்தது போன்றதல்ல அது!

கொடுமையானது அல்ல; கடுமையானது! இறைநியதிப்படி நடைபெறவேண்டிய ஒரு நிகழ்வு!! பயங்கரவாதம், சுனாமி, நிலஅதிர்வு (பூகம்பம்) "முதலானவைகள் எப்படி இறைநியதிப்படி நடைபெறும் நிகழ்வுகளோ அவைபோன்ற ஒன்றுதான் இதுவும்"' இது (புலம்பெயர்தல் - மறுவாழ்வு) நடந்தே தீரும் ஜாக்கிரதை.

அவைமட்டுமல்ல, இன்னொன்றும் அங்குண்டு! அது உள்ளத்தில் மங்காத வேதனையை - பொறுத்துக்கொள்ள முடியாத கொந்தளிப்பைத் தந்து கொண்டேயிருக்கும்! அதாவது: அல்லாஹ்வுடையவும், அவனது தூதரினதும் அங்கீகாரம் பெற்ற கலாசாரத்தைப் பின்பற்றியொழுகிய மக்கள் கௌரவத்தோடும், செழிப்போடும், சந்தோஷமாகவும், மங்களகரமான வரவேற்புக்களையும் பெற்றுத்திகழும் பொழுது, உங்களுடைய நிலை படுமோசமாக இருப்பது உணர்ந்து - உங்களது மனவேதனைக்கு அளவே இருக்காது: அதுவே பெரும் நரகவேதனையாகிவிடும்!

மக்களை ம யக்கிக் காரியம் பார்க்கும் அரச சபை உறுப்பினர்களாக - மந்தமாருதம் போன்று அலைவீசும் வார்த்தைகளை அள்ளிவீசிப் பவணிவரும் அமைச்சர்களாக, வைத்தியர்களாக, சட்டத்தரணிகளாக, பொறியிலாளர்களாக, இலௌகீகக் கல்விமான்களாக, பணம் படைத்த முதலாளிகளாக, போடிகளாக, மக்களைப் பயமுறுத்தும் சண்டியன்களாக, அப்படிப் பெரும் புள்ளிகளாகத் திகழ்ந்து பெற்றமகிமையும், ஒரு மகிமையோ என்பது அப்பொழுது தெரியவரும்.

## ஆண், பெண் சமத்துவம்

இஸ்லாத்தில் ஆண், பெண் சமத்துவம், அல்லது கணவன் மனைவி அந்தஸ்து என்பது அவரவர் இயற்கைத் தன்மைகளுக்கேற்ப - நன்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரையறுக்கப்பட்ட - எக்காலத்துக்கும் எந்நாட்டுக்கும் பொருத்தமான ஒரு திட்டமாகும்!

(நபியே!) விசுவாசிகளான ஆண்களுக்கு நீர் கூறும்: அவர்கள் தங்கள் பார்வைகளைக் கீழ் நோக்கியே வைக்கவும், தங்களையும் இரட்சித்துக் கொள்ளவும்..."

(நபியே!) விசுவாசமுள்ள பெண்களுக்கும் நீர் கூறும்: அவர்கள் தங்கள் பார்வைகளைக் கீழ்நோக்கியே வைத்து தங்கள் கற்பையும் இரட்சித்துக் கொள்ளவும் (அன்றி, தங்கள் தேகத்தில் பெரும்பாலும்) வெளியில் தெரியக்கூடியவைகளைத்தவிர, தங்கள் அழகையும், அலங்காரத்தையும் வெளிக்காட்டாது மறைத்து கொள்ளவும், தங்கள் முந்தானைகளால் மார்பையும் மறைத்துக் கொள்ளவும்.

பெண்கள்,

தங்களுடைய கணவர்கள் -

தங்களுடைய தந்தைகள் -

தங்களுடைய குமாரர்கள் -

தங்களுடைய கணவர்களின் குமாரர்கள் -

தங்களுடைய சகோதரர்கள் -

தங்களுடைய சகோதரர்களின் குமாரர்கள் -

தங்களுடைய சகோதரிகளின் குமாரர்கள் -

தங்களுடைய பெண்கள்

தங்களுடைய வலக்கரம் சொந்தமாக்கிக் கொண்டவர்கள்

பெண்களின் விருப்பமற்று தங்களை அண்டி ஜீவிக்கும் ஆண்கள்

சிறுபராயத்தையுடைய (ஆண்) குழந்தைகள்

ஆகிய இவர்களைத் தவிர, (மற்றெவருக்கும் தங்களது அலங்காரத்தையும், அழகையும் காட்டவேண்டாம். அன்றி தங்களுடைய அலங்காரத்தில் மறைந்திருப்பதை அறிவிக்க, (பூமியில்) தங்களுடைய கால்களைத் தட்டித்தட்டி நடக்க வேண்டாம். (அல்குர்ஆன் 24:30-31)

ஒரு பெண்ணை ஓர் ஆண் திருமணம் செய்துகொண்டால், அப்பெண்ணின் பெயரை கணவனின் பெயரோடு இணைத்து மங்கச் செய்து விடுவது ஒரு பிற்போக்குத்தனமான செயலாகும்! ஏனெனில், இஸ்லாத்தில் திருமணம் என்பது ஒரு வாழ்க்கை ஒப்பந்தமே தவிர அடிமைத்துவ அந்தஸ்தல்ல!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனைவியின் பெயரை மழுங்கச் செய்து, கணவனின் பெயரை ஓங்க வைப்பது அப்பெண்ணின் அடிப்படை உரிமையைப் பறிக்கும் ஒரு மடத்தனமான சர்வாதிகாரப் போக்காகும்!

அத்தகைய இழிந்த கலாசாரம் இஸ்லாத்தில் இல்லை கீழ்த்தேசத்தின் சகோதர சமுதாயங்களிலிருந்து வந்ததுமல்ல. ஓர் ஆணுக்கு, ஒரு பெண் மனைவியாக வாழ்க்கைத் துணைவியாக ஒப்பந்தம் (விவாகம்) செய்து கொள்கின்றபொழுது அவள் தனித்து வாழ்ந்த காலத்தை விட அதிகம் சுதந்திரத்தைப் பெறுகிறாள். திருமணமாவதற்கு முன், தாய், தந்தையருக்கு கட்டுப்பட்டு, மரியாதையின் நிமித்தம் கோணிக் குறுகி நின்ற அவள் திருமணத்தின் பின்னர் தலைநிமிர்ந்து செயல்படும் பேற்றினைப் பெறுகிறாள்! கணவனுக்கு இருக்கும் உரிமையின் பெறுமானம் எப்படியோ, அப்படியே மனைவிக்கும் உரியதாகிறது! ஆண், பெண் இருபாலாரின் இயற்கைத் தன்மைக்கு - இறைவனால் உருவாக்கப்பட்ட அந்த உடல் அமைப்பு முறைக்கு ஏற்ற வகையில் அவ்வுரிமைகள் அமைகின்றன.

சொத்தில் பங்கு, சொத்துச் சேர்த்தல், விவாகரத்து உரிமை, மறுமணம் செய்வதற்கான வாய்ப்பு, தங்கள் காரியங்களில் கணவன்-மனைவி கலந்துரையாடிச் செய்தல் (மசூரா) முதலிய அநேக விடயங்களில் நியாயமான காரணங்களைக் கொண்டு இருபாலாரும் உரிமை பெறுகின்றனர்! அப்படியான ஓர் ஒழுக்கமுறையில் அமைந்த ஆண், பெண் சமத்துவம், இஸ்லாத்தையன்றி வேறெந்த சித்தாந்தங்களிலும் உண்டோ?

## ஆங்கில அமெரிக்க கலாசாரம் அருகும் காலம் அண்மித்து விட்டது!

ஆண் மிருகங்கள், தமக்குப் பிடித்தமான பெண் மிருகங்களைப் பதம்பார்ப்பது போல ஆண்கள் தங்கள் மனம் கவர்ந்த மங்கைகளோடு கொஞ்சிக் குலாவி குதூகலித்துக் கும்மாளமடிப்பதுதான் மேல்நாட்டுக் கலாசாரம்.

ஆங்கில கலாசாரத்தின்படி பெண்களைக் கசக்கிப் பிழிந்து, அனைவரும் ஆரத்தழுவி, அதுவே நாகரிகம் என்று சொல்லித் தனது வேட்கைகளைத் தீர்த்துக் கொள்வதுடன், பெண்களின் உரிமைக்கு வேட்டு வைக்கும் அவர்களது போக்கு மனித சமுதாயத்திற்குப் பொருந்தாத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்று! இவை பற்றி அப்பெண்கள் உணர்வதில்லை! நம்மவரில் சிலர் அறிவதுமில்லை!!

ஆங்கில, அமெரிக்க, எஹூதி, நஸாராக் கலாசாரம் அதன் முடிவுகாலத்தை இப்பொழுது நெருங்கி விட்டதெனலாம்.

அமெரிக்காவின், "நிவ்ஓலின்", "அலபாமா", "மிஸ்ஸி சிப்பி" முதலான பிரதேசங்களைத் தாக்கிய "கத்தரினா" என்னும் சூறாவளியினாலும், அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட கடற் கொந்தளிப்பு, வெள்ளப்பெருக்கினாலும், அவற்றினோடொற்றி எழுந்த தீயினாலும், பிற இயற்கை, செயற்கை அழிவுகளினாலும் அந்நாடே அதிர்ந்து போயிருக்கிறது இன்று! போதாக்குறைக்கு, ரீட்டா சூராவளி மக்களை வெளியேற்றிவருகிறது. விஞ்ஞானிகள் கைவிரித்து நிற்கின்றனர்! மணிக்கு 200 கி.மீ வேகத்தில் காற்றின் வேகம், ஆழிப்பேரலை ஆட்டிப்படைக்கிறது. எமது பிரதேசத்திலும் ஆழிப்பேரலை அனர்த்தங்கள், வேறு இயற்கை உபாதைகள் தோன்றுகின்றனவென்றால், அஃது அந்த அமெரிக்க, ஐரோப்பியனின் நா(ய்)கரிகத்தையும், கலாசாரத்தையும் சிலர் பின்பற்றுவதுதான் என்பதை மறவாதீர்கள்!

அங்கு, விஞ்ஞானம் மலைத்து நிற்கிறது!
இறைவனின் எச்சரிக்கை மிகைத்து வருகிறது!!

அவர்களுடைய, உலகை விஞ்சிய விஞ்ஞானம் அவர்களைக் காப்பாற்ற முடியாது தவிக்கிறது! இனிமேல் வரப்போகும் எதிர்பாக்கப்படுகின்ற இயற்கை, செயற்கை போன்ற இறைதண்டனைகள் அவர்களுடைய, உலக அகம்பாவித்தனத்தையும், காவாலிக் கலாசாரத்தையும், அடியோடு அழித்தே தீரும் என்ற அறிகுறிகள் காணப்படுகின்றன. இக்கருத்தினை நான் வெறுமனே சொல்லவில்லை, ஹதீஸ்களை ஆராய்ந்த பின்னரே கூறுகின்றேன்! அவற்றின் மூலம் நான் அனுமானித்த உண்மையாகும்இது, ஈராக் மக்களினதும், ஆப்கான் பிரஜைகளினதும் பாலஸ்தீன போராளிகள், ஈரானியச் சகோதரர்களின் ஈமானின் பலம், அப்பாவி மனிதர்கள் அனைவரினதும் கையேந்துதல், கைகூடும் காலம் நெருங்கி வருகிறது!

அத்தகைய போலி நாகரிகத்தை நம்பி, ஹிந்து, முஸ்லிம், பௌத்த சகோதர, சகோதரிகளே ஏமாந்து போய்விடாதீர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இராவணன்

அக்காலத்திலே அன்னிய நாட்டிலுனுள் பிரவேசித்து அவர்களுடைய விவசாயங்களை அறுவடை செய்து வருதல், ஆடு, மாடுகளை-கால்நடைகளைக் கவர்ந்து வருதல், மனிதனைக் கைது செய்து கடத்தி வருதல் முதலானவைகள் யுத்தத்திற்கு அறிகுறிகளாகக் கருதப்பட்டன.

ஏன், நம்முடைய இலங்கைத் திருநாட்டின் கிழக்குப் பிரதேசத்திலே, ஒரு சமுதாயம் முழுவதுமே, முஸ்லிம்களாகக் கருத்துமாற்றம், மனமாற்றம், கடவுள் மாற்றம் பெறுவதற்குக் காரணமாய் அமைந்திருந்ததும், அத்தகைய யுத்த, எச்சரிக்கையும், அதனாலெழுந்த போருமேயாகும்! அதற்கு ஏறாவூரும் சத்துருக்கொண்டானும், சந்திவெளியும், வந்தாறுமூலையும் வரலாற்றுச் சான்றுகளாக விளங்குகின்றன.

அதுபோலத்தான், இராவணன் சீதாபிராட்டியாரைக் கடத்தி வந்து, அசோகவனத்தில் பாதுகாப்பாக வைத்து, பெண்களையே காவலாளிகளாவும், பணிவிடை செய்பவர்களாகவும் அமர்த்தினான்.

சீதா பிராட்டியார் கடத்தி வரப்பட்டு, பாதுகாப்பாக பத்தினித்தனத்தோடு இருக்க வசதி செய்து கொடுக்கப்பட்டாரே தவிர, அவரை இராவணன் மானபங்கப்படுத்தவில்லை. அந்த அளவுக்கு பெண்கள் மரியாதையோடும், கண்ணியத்தோடும் நடத்தப்பட்ட கலாச்சாரத்தில் வந்தவர்கள் நமது பிரதேச மக்கள்! (இராவணன் திராவிடன்- நமது குலத்தவன்; ராமனோ ஆரியன் என்பது குறிப்பிடத்தக்கது)

## கௌதம புத்தர்

புத்த மதத்தின் இஸ்தாபகர் எனக்கருதப்படுகின்ற கௌதம புத்தர் பெண்கள் விஷயத்தில் எவ்வளவு பரிவுடன் நடந்து கொண்டார் என்பது வரலாறு கண்ட உண்மை. அவற்றை முழுவதுமாக இங்கு எடுத்தெழுதுவதாயிருந்தால் இவ்வாக்கம், பேரேடாக விரிந்து விடும் என்பதால் விடப்படுகின்றது.

அவருடைய விடயத்தில் என்னுடைய கருத்து என்னவென்றால், அவர் இறைவனோ அல்லது ஒரு மத இஸ்தாபகரோஅல்ல. இறைவனுடைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

124000 தூதர்களில், ஒருவராகத் திகழ்ந்திருக்கலாம் என்பதே! ஏனெனில், "நான் முதல் புத்தரோ, அல்லது கடைசிப் புத்தரோ அல்ல; கடைசியில், 'மைத்திரியா புத்தர்' ஒருவர் வருவார்" எனப் புத்தபிரான் கூறியதாக திரு. ஞானதிலோகா தேரர் எழுதியுள்ளார்.

"புத்தர்" என்பதன் பொருள், "ஞானவெளிச்சம் பெற்றவர்", "மைத்திரியா" என்றால், "அருள் நிறைந்தவர்" என்பதாகும்.

மேலும் அவர் எழுதும் பொழுது ஆரம்பகால, புத்தரின் சிஷ்யர்கள் அவரைத் தேவனாகவோ, தெய்வமாகவோ கருதவில்லை என்றும் எழுதுகிறார்.

The Last years of Jesus Revealed என்னும் நூலில், ஆரம்பகால புத்தரின் சீடர்கள் அவரைத் தெய்வமாகக் கொண்டாடவில்லை எனவும் எழுதப்பட்டுள்ளது.

எனவே, ஞானவெளிச்சம் (வஹி) பெற்ற அருள் நிறைந்த (ரஹ்மதுல்லில் ஆலமீன்) என்னும் மைத்திரியாப் புத்தர் ஆகிய இறுதி நபியைப் பற்றி அவர் முன்னறிவிப்புச் செய்திருப்பதால், ஒரு தீர்க்கதரிசி (இறை தூதர்) ஆகவே கௌதம புத்தர் விளங்கி இருக்க வேண்டும் என்று எண்ணத் தோன்றுகின்றது!

"......மூன்று, நான்கு நூற்றாண்டுக்குள், கதைகளின் மூலம் புத்தரின் மீது தெய்வீகச் சாயம்பூசிவிட்டார்கள். கனிஷ்க மன்னர் காலத்தில் காஷ்மீரில் கூடிய பௌத்த சமயப் பொருந்தலைவர்கள் கூட்டத்தில், புத்தர் கடவுளின் அவதாரம் அல்லது கடவுளே அவரில் இரண்டறக் கலந்து விட்டார் என்று முடிவுகட்டினார்கள்" என இமாம் மௌலானா மௌதூதி (ரஹ்) அவர்கள் சொல்வதும் இங்கு கவனிக்கத்தக்கது.

## விபச்சாரம்

இன்று, பெரும்பாலான மேற்குலக மக்களும், அவர்களது கலாசாரத்தைத் தமதாக்கி கொண்ட, ஒரு சில பிறநாட்டு கீழ்த்தேச மக்களும் அந்த யஹூதிய்ய, நஸரானியப்பழக்க வழக்கங்களை, நாகரிகம் எனக் கருதித் தங்களை அறியாமலேயே சோரம்போய்க்கொண்டிருக்கின்றனர். விரல் விட்டெண்ணக்கூடிய முஸ்லிம்களும் இதில் காணப்படுகின்றார்கள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மைக் குடுக்கைக்குள் பேனாத்தடி இருப்பது போன்ற நிலை ஏற்பட்டால் மட்டும் தான், "விபச்சாரம்" என்பதல்ல. இஸ்லாமியக் கருத்தின்படி ஓர் அன்னிய ஆணும், பெண்ணும் நியாயமான காரணங்களின்றி தனித்திருப்பதும் விபச்சார உணர்வு மிகைப்பதற்கு ஒரு தூண்டுகோலாகும். விமான நிலையங்களிலும், பொதுவைபவங்கிலும் அன்னிய ஆணும், பெண்ணும் ஆரத்தழுவி முத்தமிட்டுக் கொள்கிறார்களே, இதுவும் விபச்சாரம்தான். அன்னிய ஆண்களும், பெண்களும் குழுமி இருந்து முறைகேடான இன்பமூட்டும் வார்த்தைகளைப் பேசி மகிழ்ந்தாலும் அதுவும் விபச்சாரத்திற்குத் தூபமிடுவதுதான்!

சினிமாக்கள், தொலைக்காட்சிகள், மற்றும், பலவிதமான களியாட்டங்களிலும் அன்னிய ஆண்களும், பெண்களும் "நடிப்பு" என்ற போர்வையில் ஒருவரையொருவர் அள்ளி அணைத்து, கசக்கிப் பிழிந்து, படுத்து உருளுகிறார்களே இஃது ஒரு பகிரங்கமான விபச்சாரமாகும்.

எனவே, பண்பாடுமிக்க, தூய்மையான கலாசாரத்தில் வளர்ந்த ஹிந்து, முஸ்லிம், பௌத்த சகோதர, சகோதரிகளே, அத்தகைய அடுக்காத செயலை ஆகுமாக்கிக் கொள்ளாதீர்கள்.!

"கற்பு" என்பது ஆணுக்கும் பெண்ணுக்கும் ஒன்றே! பெண் "சோரம்" போனால் அவளை விபச்சாரி என்கிறோம்; தள்ளி வைக்கிறோம். ஆனால் ஆண் சோரம்போனால் அவனை வல்லவன் என்கிறோம்; அரவணைக்கின்றோம் இது என்ன நியாயம்? இதிலென்ன சமத்துவம்? ஆகவேதான் இஸ்லாம் ஆணுக்கும், பெண்ணுக்கும் கற்பு ஒன்றே எனக் கூறுகின்றது.

## பேத்டே - Birthday

எஹூதி நஸாராக் கலாச்சாரத்தில், "பேத்டே" என்பதும் ஒன்றாகும். இதனை முஸ்லிம்களில் தங்களை, "நாகரிகவான்கள்" அல்லது "எங்களிடம் நிறையப் பணமுண்டு; எப்படியும் செலவு செய்வோம்", "நாங்கள் மேட்டுக் குடியினர்" என்று போலி நப்பாசையும், இறுமாப்பும், பெருமையும் கொண்டிருக்கின்ற "காகோடிகள்" சிலர் கொண்டாடுவதுண்டு! அதனை ஒன்றும் அறியாத அப்பாவிகள் சிலர், "கணவான்கள் செய்கிறார்களே அது ஒரு நல்ல நாகரிகமாக இருக்குமோ..." எனத்தவறாகக் கருதித்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாங்களும், தங்கள் வியர்வையைச் சிந்தி கஷ்டப்பட்டு உழைத்த சிறுவருவாய்களையும் செலவு செய்து கொண்டாடுவதுண்டு!

ஆனால் இவர்கள் அல்லாஹ்வின் தூதர் அண்ணலம் பெருமானாருக்கு அவர்கள் சொல்லுக்கு எதிராகப் போர் தொடுப்பவர்கள் அத்தகையவர்களுக்கு இஸ்லாத்தில் என்ன பங்குண்டு!

ஓ, முஸல்மான்களே! மனிதன் பிறந்த தினத்தைக் கொண்டாடுவதும், அதுபோல் அவனுடைய மரணித்த தினத்தில் (வருடந்தோறும்) துக்கம் அனுஷ்டிப்பதும் இஸ்லாத்தில் இல்லாத இறைவனும், இறைதூதரும் வெறுக்கின்ற அனாச்சாரம் என்பதை அறிந்து செயல்படுங்கள்!

Mrs. Birthday முதலான எஹூதி. நஸாராக்களின் பழக்க வழக்கங்களை மேற்கொள்ளும் இந்தக், "கழைக்கூத்தாடிகள்", "இஸ்லாம் போனால் போகிறது. எமக்குப் புகழே தேவை" என்று பெருமைக்காகச் செய்கிறார்களே தவிர மற்றப்படி பணச் செலவும், இஸ்லாமிய நடைமுறையைத் துச்சமாக மதித்த கேடுமே இவர்களுக்கு மிச்சம்! இத்தகையவர்கள் மறுமையில் அண்ணலம் பெருமானாரின் அணியில் இணையமுடியாது; மாறாக, மாறுபட்டு மதியிழந்துபோன **மாக்களின்** மத்தியில்தான் இடம்பெறுவர்.

## அப்பாவிகளா? பாவிகளா?

2005 செப்டம்பர் 29, 30ம் திகதிகளில் சன் T.V. யில் ஒரு Birthday விளம்பரம் . இது ஒரு முஸ்லிம் குடும்பத்தினால் செய்யப்பட்டிருந்தது. "பாத்திமா நாச்சியார் அருள் பெற்று வாழ்க!" என அவ்விளம்பரத்தில்- "ஷிர்க்" நிறைந்த வார்த்தை கொண்டு வாழ்த்தப்படுகிறது!

பாத்திமா மாதா அருள் பெற்று!
வேளாங்கண்ணி மாதா அருள் பெற்று!
சரஸ்வதி அருள் பெற்று!
முருகப் பெருமான் அருள் பெற்று
அம்மன் அருள் பெற்று
ஸ்ரீ கிருஷ்ணர் கடாட்சம் பெற்று!

என்று வாழ்த்துவதில் பழக்கப்பட்ட T.V அமைப்பாளர்களும், அவ்வாறே இதனையும் கூறி வாழ்த்தினர். இதனை எழுதிக் கொடுத்த, அல்லது வாசகம் சொல்லிக் கொடுத்த அந்த முஸ்லிம் குடும்பத்தினர்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எப்படிப்பட்ட பெரும் தவறைச் செய்துள்ளனர் என்பதை எண்ணிப் பாருங்கள்! இஸ்லாமிய சட்டவிரோதச் செயல் ஒன்றைச் செய்யப்போய், பெரும் இணைவைத்தலுக் குள்ளாகி விட்டிருப்பதை என்னென்பது?

இந்த முஸ்லிம் குடும்பத்தினர் அப்பாவிகளா? அல்லது பாவிகளா? அதுவும், கல்முனை அலியார் வீதி தௌஹீது வளர்ந்த பகுதி, இங்கிருந்து அப்படியும் ஒன்றா!

"விசுவாசிகளே! நீங்கள் அல்லாஹ்வுக்குப் பயப்பட வேண்டியவாறு (முற்றிலும் அவனுக்கு வழிப்பட்ட) முஸ்லிம்களாக அன்றி, நீங்கள் இறந்து விடவேண்டாம்." (3:102)

## பெருமை

(நானும் ஓர் எழுத்தாளன், பேச்சாளன் அவற்றின் மூலம் சன்மார்க்கப் பணிபுரிபவன், எனக்கும் சேர்த்துத்தான் சொல்கின்றேன்.) பெருமை, புகழ் விரும்பிகள் பற்றி, பெருமானார் (ஸல்) அவர்கள் சொல்கையில், பெருமைகள் அனைத்தும் என்போர்வையாகும். கண்ணியம் என் கால்சட்டையாகும். எனவே, எவன் இவ்விரண்டில் எதனையும் - என்னிடமிருந்து அபகரிக்கின்றானோ அவனை நான் வேதனை செய்வேன்' என்று அல்லாஹ் கூறுகின்றான் என நபி (ஸல்) அவர்கள் தெரிவித்தனர்".

- முஸ்லிம், திர்மிதி

"எவனுடைய உள்ளத்தில் அணுவத்தனை பெருமை குடிகொண்டுள்ளதோ, அவன் சுவனபதி செல்லமாட்டான்." - முஸ்லிம்

"பெருமை அடிப்போர் மறுமை நாளில் சிற்றெறும்புகள் போன்று (ஒன்று) சேர்க்கப்படுவர்." - திர்மிதி

"மனிதன் தன்னையே தான் புகழ்ந்து, உயர்வுபடுத்திக் கொண்டு. பெருமை அடித்துக் கொள்வதில் எப்பொழுதும் ஈடுபட்டுள்ளான். எனவே, அவனுடைய பெயரை அநியாயக்காரர்களான. பெருமைக்காரர்கள் என்று (ஃபிர்ஔன், ஹாமான், காறூன் ஆகியவர்களின் பட்டியலில்) எழுதப்படும். அவர்கள் அடைந்த (இம்மை, மறுமைக்) கேட்டினை இவர்களும் பெறுவார்கள்" - திர்மிதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இறந்து விட்ட தம் முன்னோர்களைக் கொண்டு பெருமை பாராட்டும் கூட்டத்தினர், உண்மையில் தனித்துவிட்டனர். நிச்சயமாக இவர்கள் நரகின் 'கரி' போன்றவர்கள்" - அபூதாவூத்.

என்றெல்லாம் இறைதூதர் இயம்பியிருக்க, அவற்றையெல்லாம் அலட்சியப்படுத்திவிட்டு, என்னைப் பார்! என் ஐஸ்வரியங்களைப்பார்! பட்டங்களைப்பார்! பதவியைப் பார்!! நான் தொடர்பு கொண்டிருக்கின்ற எனது நண்பர்களான அதிகார வர்க்கத்தினர்களைப்பார்!!! என்றெல்லாம் இறுமாப்புக் கொண்டவர்களே, உங்களுடைய பெருமைகளெல்லாம் கொஞ்சநாட்களுக்குத்தான் அதன் பின்னர் கெஞ்சினாலும் அவகாசம் உங்களுக்குக் கிடைக்காது. மண்ணறை காத்திருக்கிறது. ஆதலால், இறங்கி வாருங்கள் இறையருள் பெற!

பெருமைக்காக - புகழுக்காக - ஏதாவது உலக அரசியல் ஆதாயங்களை நோக்கமாகக் கொண்டு செய்யப்படும் நற்காரியங்களுக்கு அல்லாஹ்விடம் எந்தவிதமான கூலியோ - சன்மானமோ - ஈடேற்றமோ கிடையாது! மாறாக பெயரும் புகழும் நாடியமைக்காகத் தண்டனைதான் உண்டு!

"தீன்" உடைய சேவை செய்துவிட்டு, அதற்காகப் பொன்னாடையும், (பன்னாடையும்) பொற்கிளியும், பாராட்டும் பெறுவதென்றால்... அந்தோ! "அல்லாஹ்வின் பாதையில் உழைத்தல்" என்பதன் அர்த்தம் தான் என்ன? சில இயக்கம் (ஜமாஅத்)கள் பெரும்புள்ளிகளைத் தங்கள் அணியில் சேர்ப்பதற்காக இம்மாதிரியான முறைகளைக் கையாளுகின்றன இன்று; இவை கியாம நாளின் - உலகமுடிவின் நிகழ்வுகளாக இருக்குமோ?

அரசியலில் ஆதாயம் தேடிச் செய்யப்படும் நற்காரியங்கள் பயனிழந்து போகின்றன. பின்னர் இறை தண்டனைக்கு உட்படுத்தப்படலாம்!

- தேர்தலில் தங்களுக்கு மக்கள் வாக்களிக்க வேண்டும் என்ற உள்நோக்கோடு தடபுடல்களும், கெடுபிடிகளுமாய் மக்களுக்குச் செய்யப்படுகின்ற நற்சேவைகள்.
- சமுதாய நலம் காப்பவர் போல் பேசப்படும் பேச்சுக்கள்.
- மார்க்கத்தை வளர்க்க நாங்கள் பாடுபடுகிறோம் என்ற இறுமாப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- அல்லாஹ்வின் பாதையில் செல்கிறோம் என்று மக்கள் மத்தியில் பிரஸ்தாபித்து முகஸ்துதி தேடுதல்.
- அவற்றுக்காகச் சன்மார்க்க விழாக்கள் கொண்டாடுதல்
- ஆடைகளிலும், தோற்றத்திலும் - "இக்லாஸ்" இல்லாமல் "நாங்கள் சங்கைபொருந்திய கனவான்கள்" எனக் காண்பித்துப் பெருமைப்படுதல்.

பொதுவாகச் சொல்லப்போனால் உலக ஆதாயங்களை - மகிமைகளை - பாராட்டுக்களை - பதவிகளை எதிர்பார்த்துச் செய்யப்படும் எந்தச் சேவைக்கும் அல்லாஹ்விடம் எள்ளளவு மதிப்பும் கிடையாது; சன்மானமும் இல்லை!

மாறாக, புகழுக்காகப் பணியாற்றியவர்களின் பட்டியலில் இடம்பெற்று, அதிபாதாளச் சிறையிலுள்ள நரகலோகத் தண்டனைக்கு உள்ளாவர்!

ஆகவே, உலக ஆதாயங்களை எதிர்பார்த்து பொதுநலத் தொண்டாற்றுவதிலிருந்து காப்பாற்றி, அவற்றை உளத்தூய்மையோடு செய்ய- உயர் பணிபுரிய, அல்லாஹுத்தஆலா நமக்கு உறுதுணை செய்வானாக!

ஒரு மனிதன் செய்யும் பொது நலத்தொண்டுகள் உளத்தூய்மை (இக்லாஸ்) உடையனவா, அல்லது உள்நோக்கம் கொண்டனவா என்பதை நீர் எப்படியய்யா அறியமுடியும்? எனச் சிலர் கேட்கலாம்.

ஆம்! ஒருவருடன் பழகும் பொழுது அல்லது ஒரு குழுவினருடன் சேர்ந்து அவர்களுடைய செயற்பாடுகளைத் தொடர்ந்து அவதானிக்கும் பொழுது, அப்படிப்பட்ட சுய நலக்காரர்களுடைய தடபுடல்களை இனம்கண்டுகொள்வது சுலபமே!

அவ்வாறான போலிகளைப் புரிந்து கொள்கின்ற "புரிந்துணர்வு" - மேற்குறித்த அறிவிலிகளைத் தெரிந்து கொள்கின்ற "அறிவு" நம்மிடம் இல்லையானால், நமது சமுதாயம் நாளாவட்டத்தில் நலிந்து நாசமாக்கப்பட்டு, நாமும் நல்ல முஸ்லிம்களாக மிளிர முடியாத நிலை தோன்றும். இன்று காணப்படுவதும் அந்நிலையே!

وآخر دعوانا ان الحمد لله رب العالمين



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோல்டன் ஓப்செற் - கல்முனை.
067 - 2223939

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org